MADRAS

உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 5 | March 1943 | No. 3

விஷய சூசிகை. பக்கம்

குறிப்பு (பத்திராதிபர்)	1
பலவகை	73-76
ஹிருதயம் (ஈரோடு Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள்) L. I. M.	1—5
தன்வந்தரி (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்)	5—9
வைத்தியச்செய்தி	9
ஹிருதயம் (பத்திராதிபர்)	10-14.

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
No. 2, Police Station West Lane, Madura.

...ாட்] [விலை 0—3—0

...ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—43.

3L
...2||,||25VC
N43·5·3.

(14வது பக்கம் தொடர்ச்சி)

ணம், பூரணம், முதலிய ஜலத்தொழிலால், அவலம்பனம் கரோதி— அந்தந்த உறுப்புகளின் வேலையைச் செய்யும் சாமர்த்யத்தை அளிக்கின்றது." இங்கு உரஸ் என்ற பதத்திற்கு நமது கண்டனக்காரர் மதப்படி உரோகுஹை அல்லது சுவாஸப்பைகளும் ஹார்ட்டும் அதைச்சுற்றியுள்ள பாகங்களும் என்பனபோன்ற அர்த்தங்கள் பொருந்துவதில்லை. நமது மதப்படி சுவாஸப்பைகள் என்ற அர்த்தம்தான் பொருந்துகிறது. "உதக வாஹிநாம் மூலம் க்லோம" என்ற வசனமும் இங்குள்ள "அம்புகர்மணு" என்ற பதத்தால் விவிருதமாகிறது. கண்டனக்காரர் மதப்படி Heart lungs ஆக மூன்றும் ஹிருதயமாதலால் இந்த மூன்றைக்காட்டிலும் வேறுபட்டதும் அவலம்பகஸ்தானமுமான "உரஸ்" எது என்பதை இந்த புருஷாயுளில் பிரமாண புரஸ்ஸரமாக நமது கண்டனக்காரர் காட்டமுடியுமா என்பதை கவனிக்க விரும்புகிறோம். உரஸ் என்பது சரீரத்திலுள்ள எல்லா கபஸ்தானங்களுக்கும் அம்புகர்மாவைச் செய்வதாக வசனம் கூறுவதால் உரஸ் பதத்திற்கு lungs யும் பொருளாகச் சொல்லுமிவர் lungs களுக்கும் அம்புகர்மாவை அங்கீகரிக்கவேண்டியதாகின்றது. ஆகவே வலது lung க்லோமா என்ற நமது மதத்தில் க்லோமாவுக்கு உதகவாஹி மூலத்வத்தை இவர் ஆக்ஷேபிப்பது ஆக்கிலவ்யாமோஹமாகும்.

குறிப்பு (பத்திராதிபர்)

14—2—43 தேதியிட்டு ஈரோடு டாக்டர் V. அச்சுதன் நாயர் அவர்கள் 'சந்திரிகையில் பிரசுரிக்கும்படி அனுப்பியுள்ள ஓர் கடிதம் கிடைத்தது. அந்த கடிதம் முழுவதும் குரோதமும் அர்பாஷைகளும் நிறைந்திருப்பதால் அதைப் பிரசுரிக்கமுடியாமலிருப்பதற்கு வருந்துகிறோம். இவ்வித கடிதங்களைப் பிரசுரிப்பது அவேஷவிருத்திக்குக் காரணமாகும். நமது டாக்டரைப்பற்றி நிந்தையாக பிறர் கடிதம் எழுதினுல் அதையும் பிரசுரிக்கும்படி நேரும். ஆகையால் இதுபோன்ற விஷயங்களில் சற்று நிதானம் காட்டுவது பண்டிதர் கடமையாகும். அந்தக்கடிதத்தின் சாரமாவது—தன் முழு வியாசத்தையும் ஒரே தடவையில் பிரசுரிக்கவில்லை ஆகவே தன் வியாசத்தின் கருத்தை வாசகர்கள் உணரமுடியாமல் போகும் என்பதே. சுவல்ப பக்கங்களுள்ள சந்திரிகையில் முழு பாகத்தையும் இவர் வியாசத்திற்கே அளிக்கமுடியவில்லை. மற்ற விஷயங்களை வாசகர்களே கவனிக்கக்கூடும்.

படி பசும்பாலில் 15 பலம் கற்கண்டு சேர்த்துப் பாகுசெய்து அதில் மேற்படி சூர்ணங்களைச்சேர்த்துக் கிளறி தேன்படி அரைக்கால், நெய் படி கால் சேர்த்து பத்திரப்படுத்தி வேளைக்கு நெல்லிக்காயளவு சாப்பிட்டுவர வெட்டைநோய் தீரும். விந்து ஊறும்.

190. பிருங்கராஜாஸவம்:—கரிப்பான் ரஸம் சின்னப்படி 32 ஓர் பானையில் போட்டு அதில் சர்க்கரை தோலா 800, கடுக்காய்த் தூள் தோலா 32 சேர்த்து வாய்மூடி 15 நாள் வைத்திருந்து பிறகு அதில் திப்பிலி தோலா 8, ஜாதிக்காய், கிராம்பு, கருவாபட்டை, ஏலம், பச்சிலை, சிறு நாகப்பூ, இவை மொத்தம் தோலா 8, இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டு மறுபடி 15 நாள் மூடிவைத்திருந்து பிறகு வடிகட்டி காலையிலும் சாயங்காலத்திலும் வேளைக்கு அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு வரை சாப்பிட உடம்புதேறும்.

191. திரிகடு, கொடிவேலிவேர்ப்பட்டை, வாய்விளங்கம், திரிபலை, கோரைக்கிழங்கு, ஆக இந்த ஒன்பது சரக்குகளும் வகைக்குப்பலம் ஒன்று, அயச்சிந்தூரம் பலம் ஒன்பது. இவைகளில் முன் சொன்ன ஒன்பது சரக்குகளையும் இடித்து வஸ்திரகாயம் செய்து கொண்டு பிறகு அயச்சிந்தூரத்தைக் கலந்து வைத்துக் கொள்ளவும். வேளைக்கு அரைக்கால் தோலாவரை தேன் முதலிய அனுபானங்களில் கொள்ள பாண்டு, காமாலை, சோகை, முதலியவை தீரும்.

192. ரக்தபித்தாந்தகம்:-ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சடாமாஞ்சி, கோஷ்டம், தாளிசபத்திரி, சுவர்ணமாக்ஷிகச்சிந்தூரம், அயச்சிந்தூரம், அப்பிரகச்சிந்தூரம், வகைக்குத்தோலா ஒன்று, வெள்ளி பஸ்மம்தோலா எட்டு, இவைகளை ஒன்றுசேர்த்து கல்வத்திலிட்டு சுத்த ஜலம்விட்டு அரைத்து இரு குன்றியளவு மாத்திரை உருட்டிக்காய வைத்து வேளைக்கு ஒரு மாத்திரையைத் தகுந்த அனுபானத்தில் சாப்பிட ரக்தபித்தநோய் விலகும். குறிப்பு:—இந்த முறையில் சுவர்ணமாக்ஷிகச் சிந்தூரத்திற்குப்பதிலாகச் சுவர்ண சிந்தூரம் சேர்த்தால் அது மஹாரக்தபித்தாந்தகம் எனப்படும்.

193. சோதசார்துலம்:—வெடியுப்பு, பஞ்சலவணம், சத்திக்ஷாரம், ரஸசிந்தூரம், யவக்ஷாரம, ஆக இந்த ஒன்பது சரக்குகளைச் சம

யிடை எடுத்து ரசசிந்தூரம் நீங்கலாக மற்றவைகளைப் பொடி செய்து பிறகு ரசசிந்தூரத்தையும் சேர்த்து அரைத்து பத்திரப்படுத்தி மூன்று குன்றி யிடைமுதல் 6 குன்றிவரை தகுந்த அனுபானங்களில் சாப்பிட வீக்கம் தீரும். மூத்திர கிருச்சிரம் போம்.

194. பிருகத்சந்திராமிருத ரஸம்:—ரஸம், கந்தகம், வகைக்குத் தோலா ஒன்று, அப்பிரகச்சிந்தூரம் தோலா இரண்டு, பச்சைக்கர்பூரம் தோலா கால், சுவர்ணசிந்தூரம் தாமிர பஸ்மம் வகைக்குத்தோலா அரை, அயச்சிந்தூரம் தோலா ஒன்று, விருத்ததாரக விதை, ஜீரகம், மொதக்கன்கிழங்கு, கண்டீர்விட்டான், நீர்முள்ளி விதை, குருந்தொட்டி, பெருங்குருந்தொட்டி, பூனைக்காலி விதை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, கஞ்சாவிதை, பளிங்குசாம்பிராணி, வகைக்குத்தோலா கால் இவைகளைப் பொடிசெய்து கல்வத்திலிட்டு அரைத்து நான்கு குன்றியளவு மாத்திரை செய்து வேளைக்கு ஒரு மாத்திரையைத் திப்பிலிப்பொடி தேன் அனுபானத்தில்சாப்பிட காஸநோய் தீரும்.

195. நாகார்சுநாப்ரம்:—ஆயிரம் புடம்போட்ட அப்பிரகச்சிந்தூரம், மருதம்பட்டை சத்து, இவைகளைச் சமயிடை எடுத்துக் கல்வத்திலிட்டு ஏழுநாள் அரைத்து இரு குன்றியளவு மாத்திரையாக உருட்டி நிழலில் காயவைத்து வேளைக்கு ஒரு மாத்திரை சாப்பிட அதிசாரம், ரக்தபித்தம், க்ஷயம், முதலிய நோய்கள் போம்

196. நாரிசேலலவணம்:—நன்றாக முதிர்ந்த தேங்காயைக் குடைந்து இளநீருடன் கூடிய அதன் உள்பாகத்தில் நிறைய உப்பை அடைத்து வாயைமூடிப் புடமிட்டு தேங்காயை உடைத்து உள்ளிருக்கும் உப்பை எடுத்துப் பொடிசெய்து கால்தோலாவரை வெந்நீரில் கொடுக்க பரிணாமசூலம் போம்.

197. அமிருதபல்லாதகீ:நன்றாக விளைந்த சேங்கொட்டைதோலா 256 எடுத்து அவைகளை இரண்டாக நறுக்கி ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 16 விட்டு அடுப்பேற்றி நான்கு படியாகவற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி ஓர் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி அதில் பசுநெய் சின்னப்படி ஒன்று, பசும்பால் சின்னப்படி.

நான்கு, ஜீனி தோலா 64 சேர்த்து பாகுபோல ஆகும்வரை காய்ச்சி இறக்கி ஓர் ஜாடியில் பத்திரப்படுத்தி எழுநாள் தானியபுடம்வைத்து எடுத்து காலையிலும் சாயங்காலத்திலும் சரீர பலத்தை யனுசரித்து அரைத்தோலா வரையில் உபயோகிக்க சரீரம் மினுக்கும். சகல ரோகங்களும் சமிக்கும்.

198. ஸாரஸ்வதாரிஷ்டம்:—வல்லாரை (சமூலம்) தோலா 80, தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலப்பூசனிக்கிழங்கு, கடுக்காய், விலாமிச்சவேர், இஞ்சி, சதகுப்பை, வகைக்குத்தோலா இருபது, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு எட்டுபடியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி ஓர் புதிய பானையில் போட்டு அதில் தேன் நாற்பது தோலா, சர்க்கரை தோலா 100 சேர்த்து அதில் காட்டாத்திப்பூ தோலா இருபது, அரேணுகம் சிவதை, திப்பிலி, கிராம்பு, வசம்பு, கோஷ்டம், அமுக்கரா, தான்றிக்காய், சிந்தில், ஏலம், வாய்விளங்கம், கருவாப்பட்டை, வகைக்குத்தோலா ஒன்று இவைகளைப் பொடிசெய்து வஸ்திரகாயம்செய்து போட்டுப்பிறகு ஒரு தோலா தங்கரேக்கையும் சேர்த்து வாய்மூடி ஒரு மாதம் வைத்திருந்து வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு சாப்பிட புத்தி தீக்ஷ்ணமாகும். மூளையைப்பற்றிய நோய்கள் தீரும். குறிப்பு:—இங்கு வல்லாரைக்குப்பதிலாகப்பிரமியை எடுத்துக்கொள்ளுவதுண்டு. பிராஹ்மீ என்ற விடங்களில் பிரமியை எடுத்துக் கொள்ளுவதுதான் நியாயமாகும். ஆனால் பலர் வல்லாரையையே வுபயோகிக்கின்றனர். வல்லாரை சேர்த்த மருந்தே நல்ல குணத்தைக் கொடுக்கின்றது. தங்கரேக்கை ஷை கஷாயம் விட்டு அரைத்துச்சேர்க்கவேண்டும். தங்கரேக்கு ஷை அரிஷ்டத்தில் கலந்து விடுவதாக நூல்கள் கூறுகின்றன. தங்கரேக்கைச் சேர்க்காமல் தான் பலர் இம்மருந்தைத் தயாரிக்கின்றனர். தங்கம் சேர்க்காமல் தயாரிப்பதுதான் நமது வாடிக்கை.

199. ஸ்வர்ணவங்கம்;—ஓர் இரும்பு பாத்திரத்தில் ஒரு பலம் சுத்தித்த வெள்வங்கத்தைப் போட்டு அடுப்பேற்றி எரிக்க உருகும். அப்பொழுது ஒரு பலம் சுத்தித்த பாதரஸத்தை அதில்விட அது வங்கத்துடன் கலந்துபோகும். கீழே இறக்கி ஆறிய பிறகு அதைக்

கல்வத்திலிட்டு நவாச்சாரம், கந்தகம், வகைக்கு ஒரு பலம் சேர்த்துப்பொடிசெய்து ஓர் காசுக்குப்பியில் அடைத்து வாய்க்கு மாக்கல் மூடி குப்பிமுழுதும் சீலைமண்செய்து காயவைத்து வாலுகா யந்திரத்தில் நான்கு யாமம் எரித்து ஆறவிட்டு எடுக்க சிந்தூரம்பளபளப்பாக இருக்கும். தகுந்த அனுபானத்தில் நான்கு குன்றியளவுவரை சாப்பிட மேகநோய்கள் தீரும். சரீரம் புஷ்டியாகும்:

200, சூக்ஷ்மைலாரிஷ்டம்:—சிற்றேலம் தோலா 8, ஜாதிபத்திரி, பெரிய ஏலம், காட்டாத்திப்பூ, கிராம்பு, கருவாப்பட்டை, சிறுநாகப்பூ, க்ஷீரகாகோலி, வகைக்குத்தோலா ஒன்று, இவைகளை ஒன்றாகப்பொடிசெய்து ஓர் ஜாடியில் சேர்த்து அதில் ஸஞ்ஜீவனீசுராசின்னப்படி கால், சுத்தஜலம் சின்னப்படி அரைக்கால் இவைகளைப் போட்டு 15 நாள் வைத்திருந்து பிறகு வடிகட்டி சீசாவில் பத்திரப்படுத்தி கால்தோலர்வரை உபயோகிக்க சூலைநோய் முதலியன போம்.

201. சந்தனாதி கஷாயம்:—செஞ்சந்தனம், வெள்ளைச்சந்தனம், விலாமிச்சவேர், நிராசைஷ, சீந்தில், அதிமதுரம், நெல்லிவற்றல், இவைகளை வகைக்கு அரைக்கால் தோலா எடுத்துச் சின்னப்படி அரை ஜலம் விட்டு நான்கில் ஒன்றாகவற்றவைத்துக்கஷாயம்செய்து வடிகட்டி அதில் நான்கு குன்றியிடை சீனிக்காரம் பொடிசெய்து சேர்த்துச்சாப்பிட மேக நோய்கள் தீரும். குறிப்பு:—சீனிக்காரத்தை ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைசெய்து இருபது எருவில் புடமிட்டாலும் அல்லது அடுப்பேற்றி எரித்தாலும் சீனிக்காரம் மலர்ந்து போகும். அதை எடுத்துக்கொள்ளவும்.

202. த்ரியூஷண லௌஹம்:—திரிகடு, கஞ்சா, செவ்வியம், கொடுவேலி, பிடாலவணம், பூநீறு, கார்போகவரிசி, இந்துப்பு, சௌவர்சலவணம், இவை வகைக்குத் தோலா ஒன்று, அயச்சிந்தூரம் தோலா 11 அயச்சிந்தூரம் நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து பிறகு அயச்சிந்தூரத்தையும் சேர்த்துக்கொண்டு வேளைக்கு நான்கு குன்றியிடையை தேன் அல்லது நெய் அனுபானத்தில் சாப்பிட மேகரோகம் (அதாவது நெரிந்தி) குறையும். குறிப்பு:—இங்கு கஞ்சாவுக்குப்பதிலாக கடுக்காயைச்சிலர் சேர்க்கின்றனர்.

ஹிருதயம்.

ஈரோடு டாக்டர் V. அச்சுதன் நாயர் L. I. M.

இனி க்லோம புப்புஸங்களை இரண்டு சுவாஸாசயங்களின் பெயராகச் சொல்லியிருப்பதை கவனிப்போம். ஆங்கிலத்தில் Lungs என்ற ஒரே பெயரால் அழைக்கப்படும் ஓர் உறுப்பை இடதும் வலதும் என்ற பேதத்தை மட்டும் அடிஸ்தானமாகக்கொண்டு இரண்டு தனிப்பட்ட உறுப்புகளைப்போல் வெவ்வேறு பெயரால் ஆயுர்வேதத்தில் வ்யவஹரித்திருப்பதாக நினைக்க எதுவொன்றும் இல்லை. ஒரே உறுப்பின் பிரிவாகவுள்ள இரண்டு சுவாஸாசயங்களும் உருவத்திலும் அமைப்பிலும் தொழிலிலும் ஒன்றுக்கொன்று முற்றிலும் ஒத்திருப்பதால் இரண்டிற்கும் தனித்தனிப் பெயர்இருக்க நியாயமில்லை. அது போகட்டும் க்லோம புப்புஸங்களின் ஸ்தானத்தைப்பற்றிச்சிந்திப்போம். "தஸ்ய வாம பார்சுவே ப்லீஹா புப்புஸச்ச, தக்ஷிணதோ யக்ருத் க்லோம ச" என்றவசனத்தில் ப்லீஹாவும், அதற்கு கீழே புப்புஸமும் என்று அர்த்தம் செய்வதற்கு கிரம நியாயமகமில்லை என்று பத்திராதிபரவர்கள் சொல்லுகிறார். ஆனால் ஹிருதயத்தில் இடது பக்கத்தில் முதலில் ப்லீஹாவும் பிறகு புப்புஸமும் வலது பக்கத்தில் முதலில் யக்ருத்தும் பிறகு க்லோமாவும் என்று அர்த்தம் செய்வதற்கு கிரம நியாயமிருப்பதாகக் காண்கிறோம். இதைக்கவனித்தால் க்லோமாவை 'ஹார்டிற்கும் யக்ருத்திற்கும் மத்தியில்அமைந்துள்ள வலதுசுவாஸாசயமாகக்கொள்வதும் புப்புஸத்தை 'ஹார்டி'ற்கும் ப்லீஹாவுக்கும் மத்தியில்அமைந்துள்ள இடது சுவாஸாசயமாகக்கொள்வதும் சாஸ்திர விரோதமென்று புலனாகிறது. க்லோம புப்புஸங்களை ஆமாசய கோஷ்டாங்கங்களாகவோ பித்தாசய கோஷ்டாங்கங்களாகவோ கூறிவிடில் கபாசயத்திற்கு கோஷ்டாங்கங்களின்றிப் போகுமென்று பத்திராதிபரவர்கள்கவலைப்படுகிறார் நமது மதத்தில் இந்தக்கவலைக்கு இடமில்லை. ஏனென்றால் கோஷ்டாங்கங்களை ஆசயங்களுக்குப் பங்கிடுவதில்பத்திராதிபர் கொண்டுள்ள கிரமமானது சாஸ்திர விருத்தமாதலால் நாம் அதை ஒப்புக்கொள்வதில்லை என்று முதலில் கூறினோம். மேலும் கபாசயத்திற்குக் கோஷ்டாங்கங்கள் கண்டிப்பாகவிருக்கவேண்டுமென்று சாஸ்திர சித்தாந்தமும் இல்லை. புப்புஸத்தை

ஆமாசய பர்யாயமாகக் கொண்டால் மேற்சொன்ன வசனங்களெல்லாம் விரோதிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மை ஆனால் நமது மதத்தில் புப்புஸமென்பது ஆமாசயமல்லவென்றும் Stomach உறுப்பிற்குதான் அந்த பெயரென்றும் ஞாபகப்படுத்துகிறோம். "உர: கண்டசிர: க்லோம பர்வாண்யாமாசயோ ரஸ:" என்ற விடத்தில் கபஸ்தானமாகச்சொல்லியுள்ள க்லோமாவை பித்தாசயஸ்தமாக எவ்விதம் ஒப்பலாம்? என்று கேட்கிறார். இந்தக் கேள்வி வாக்படாசார்யரைத்தான் கேட்டிருப்பதாக நம்புகிறோம். அஷ்டாங்க ஹிருதயத்தில் வாதபித்த கபங்களின் ஸ்தானங்களைச் சொல்லும் வசனங்கள்:—"பக்வாசய கடீஸக்தி ச்ரோத்ராஸ்தி ஸ்பர்சனேந்த்ரியம்। ஸ்தானம் வாதஸ்ய தத்ராபி பக்வாதானம் விசேஷத:॥ நாபி ராமாசய ஸ்வேதோ லஸீகா ருதிரம் ரஸ:। திருக் ஸ்பர்சனம்ச பித்தஸ்ய நாபிரத்ர விசேஷத:॥ உர: கண்ட சிர: க்லோம பர்வாண்யாமா சயோ ரஸ:। மேதோ க்ராணம்ச ஜிஹ்வாச கபஸ்ய ஸுதராமுர:" இங்கே ஸ்பர்சனேந்த்ரியத்தை வாதத்திற்கும் பித்தத்திற்கும் ஸ்தானமாகவும் ஆமாசயத்தையும் ரஸத்தையும் பித்தத்திற்கும் கபத்திற்கும் ஸ்தானமாகவும் சொல்லியிருப்பதை காண்கிறோம். ஆனால் பக்வாசயம், நாபி, உரஸ் இவைகள் க்ரமத்தில் வாதபித்த கபங்களுக்கு விசேஷ ஸ்தானமென்று சொல்லியிருப்பதை கவனித்தாலும் "தேஹவ்யாபிநோபி ஹ்ருந்நாப்யோரதோ மத்யோர்த்வ ஸம்ச்ரயா:" என்ற வசனத்தை கவனித்தாலும் பண்டிதர்களுக்கு தோஷங்களின் ஏகாச்ரய த்வவசனத்தில் அதிருப்தி ஏற்பட அவகாசமில்லை. "கபஸ்ய ஸுதராமுர." "உரஸ்தானமுதானஸ்ய" "வ்யானோ ஹ்ருதி ஸ்தித:" "ஸாதகம் ஹ்ருத்கதம் பித்தம்" இத்யாதி வசனங்கள் ஆயுர்வேத சாஸ்திரத்தில் அல்பக்யர்களுக்கு அநேக கேள்விக்கிடம் கொடுக்குமென்பது பத்திராதிபரவர்களுக்கு தெரியாததல்ல. அம்மாதிரி கேள்விக்கு இங்கே பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறோம். பித்தாசயஸ்தமாகக்கொண்ட க்லோமாவை பித்தஸ்தானங்களில் ஒன்றாக ஏன் சொல்லவில்லை என்று கேட்கலாம். ஆனால் பித்தாசயத்தில் இருக்கும் உறுப்புகள் முழுதும் பித்தஸ்தானங்களாக விருக்கவேண்டுமென்று நியமமில்லை. ஆமாசயத்திலிருக்கும் யகிருத்தும் ப்லீஹாவும் ஆமத்திற்கு ஸ்தா

ஙகளல்ல. பக்வாசயத்திலிருக்கும் விருக்கங்கள் பக்வான்னத்திற்கோ வாயுவிற்கோ ஸ்தானங்களல்ல. அதுபோல பித்தாசயஸ்தமான க்லோமாவும் பித்தஸ்தானமல்லவென்று சொல்வதில் சாஸ்திர விரோதமில்லை. க்லோமாவை கபஸ்தானமாக நிர்ணயிப்பதில் "உர: கண்டசிர: ஸந்திபர்வாண்யாமாசயோரஸ:" என்ற பாடாங்கரத்தையும் "ஆமாசயேத ஹ்ருதயே கண்டே சிரஸி ஸந்திஷு ஸ்தானேஷ்வேஷு மநுஷ்யாணாம் ச்லேஷ்மாதிஷ்டத் யனுக்ரமாத்" என்ற வசனத்தையும் இவைக்குத் தகுந்தவாறு பஞ்சாத்மகமான கபத்திற்கு விசேஷஸ்தானங்களை சொல்லும் இடத்தில் க்லோமாவை கூறுமலிருப்பதையும் கவனிக்கவேண்டியது. இங்கே இன்னும் ஓர் விஷயம். பத்ரிராதிபரவர்கள் மதப்படி உரஸ்ஸிற்கு க்லோம புப்புஸங்களென்று அர்த்தம் கொண்டால் கபஸ்தானங்களை சொல்லும் வசனத்தில் உரஸ்ஸைச்சொன்னபிறகு க்லோமாவை மறுபடியும் சொல்வதற்கு நியாயமில்லை. உரஸ்ஸிற்கு புப்புஸமென்றும் இடது பக்கத்திலுள்ள சுவாஸாசயமென்றும் அர்த்தம் சொல்லவும் முடியாது. ஏனென்றால் க்ஷதகாஸத்திற்கு உர: க்ஷதமென்றும் க்லோம க்ஷதமென்றும் இரண்டு ஸம்ப்ராப்தி சொல்லக்கிடையாது. ஆகவே க்லோம புப்புஸங்களும் உரஸும் சுவாஸாசயங்களை குறிக்கும் பதங்களல்லவென்று சித்தமாகிறது. "உதகவாஹி நாம் தாலு மூலம் க்லோம ச" என்ற வசனமும் க்லோமாவை சுவாஸாசயமென்று போதிப்பதில்லை. சுவாஸாசயத்தை உதகவாஹி ஸ்ரோதஸ்ஸின் மூலமென்று சொல்வதே அஸங்கதம். மேலும் இடது சுவாஸாசயத்தில் இல்லாத ஒரு விசேஷமும் வலது சுவாஸாசயத்தில் இல்லை. "உபாங்கானி ச தத்பக்ஷே........" இத்யாதி பாவப்ரகாச வசனத்திற்கு ப்லீஹாவுக்குக்கீழே புப்புஸமென்று அர்த்தம் செய்ய முடியாதென்றும் ஹ்ருதயத்திற்குக் கீழேயும் புப்புஸம் வ்யாபித்திருப்பதை மட்டும்தான் அது காட்டுகின்றதென்றும் பத்ரிராதிபரவர்கள் சொல்லுகிறார். சுவாஸாசயங்கள் 'ஹார்ட்' என்ற உறுப்பின் நாலாபக்கமும் பரவிக்கிடப்பதாக நாம் முன்னமே கூறியுள்ளோம். சுவாஸாசயங்களை க்லோமா புப்புஸங்களாகவும் கபாசயமாகவும் கொண்டு அது 'ஹார்ட்' என்ற ஹ்ருதயமாகிய ரக்தாசயத்திற்கு கீழேமட்டுமல்ல மேலேயும் பார்சுவ பாகங்களிலும் வ்யாபித்

திருப்பதாகச் சொன்னால் "யக்தஸ்யாத்ய: க்ரமாத்பரோ" என்ற வசனத்தில் சொல்லப்பட்டுள்ள ஆசயக்ரமத்திற்கு விருத்தமாகும். "தத்வாமே புப்புஸப்லீஹானௌ தக்ஷிணேங்கே யக்ருத்மதம்" என்றவிடத்தில் புப்புஸத்தை இடது பக்கத்திலுள்ள சுவாஸாசயமாகக் கொண்டால் வலது பக்கத்தில் யக்ருத்தை மட்டும் சொல்லி உதகவாஹி ஸ்ரோதஸ் என்பதால் விசேஷ ப்ராதான்யத்தை அர்ஹிக்கும் க்லோமாவென்ற வலது சுவாஸாசயத்தை ஏன் சொல்லவில்லை என்ற கேள்விக்கு பதில் தேட நேரிடும். "ஸ்தானான்யாமாக்நி பக்வாநாம் மூத்ரஸ்ய ருதிரஸ்ய ச | ஹ்ருதுண்டுகம் புப்புஸ்ச்ச கோஷ்டமித்யபிதீயதே" என்றவிடத்தில் ஆமாசயத்தையும் புப்புஸத்தையும் வெவ்வேறாகச் சொல்லியிருப்பது நமது மதத்திற்கு முற்றிலும் பொருத்தமானதென்று முன்சொன்ன நியாயங்களால் ஸ்தாபித்துள்ளோம். ஆனால் இங்கே ருதிரத்தின் ஸ்தானம் வேறு ஹ்ருதயம் வேறு என்று சொல்லியிருப்பதை பத்ரிராதிபாவர்கள் கவனிக்க வேண்டும். மேலும் க்லோமாவை விட்டு புப்புஸத்தை மட்டும் மூலத்தில் சொல்லியிருப்பதையும் வ்யாக்யானத்தில் 'புப்புஸ க்ரஹணம் சுவாஸாசய ஸாம்யேந க்லோம்ந உபலக்ஷணம்' என்று சொல்லக்காணோம் என்பதையும் கவனித்தால் சுவாஸாசயங்களை ஹ்ருதயா பின்னங்களாக்க வேண்டுமென்று புலனாகிறது. "தத்ர யக்ருத் க்ரஹணம் ரக்தாதார ஸாம்யேந ப்லீஹ்ந உபலக்ஷணம். யக்ருத் ஸமீபாநாம் ஹ்ருதயாதீநாம் ச" என்ற வசனத்திலுள்ள 'ஆதி' பதத்தில் க்லோமபுப்புஸங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது நியாயம். ஆனால் சுவாஸாசயங்களாகவும் கபாசயமாகவும் சொல்லப்பட்டுள்ள பத்ரிராதிபாவர்களுடைய க்லோம புப்புஸங்களுக்கு "ரக்தாதார ஸாம்யேந" என்ற வசனம் பொருந்தாது. "யக்ருத் ஸமீபாநாம்" என்ற வசனத்தைக்கொண்டே க்லோம புப்புஸங்களை க்ரஹிக்கவேண்டுமானால் அவைகள் சுவாஸாசயங்களாகத்தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. Stomach முதலிய ஆம பித்தாசயங்களில் இருக்கும் உறுப்புகளும் யக்ருத் ஸமீபங்களாகையால் அவைகளை க்லோம புப்புஸங்களாகக் கொள்வதில் சாஸ்திர விரோதமில்லை. 'ஆதி' பதத்தால் சுவாஸாசயங்களை மட்டும்தான்

நிரூபிக்கவேண்டுமென்று சொன்னால் "யக்ருத் ஸமந்தாத் கோஷ்டம்ச"......இத்யாதி ஸுச்ருத வசனத்தில் புரீஷத்திற்குச் சொல்லியுள்ள ஸமஸ்த கோஷ்ட ஸ்திதத்வம் கிடைக்காமல் போய்விடும். "உண்டுகக்ரஹணோத ஸாந்நித்யாத் குதம் க்ருஹ்யதே தேநோர்த்வம் யக்ருதாதி வ்யவஸ்திதம் அதஸ்தாத் குதபர்யந்தம் கோஷ்டம் ஸமந்தாத் ஸமாச்ரிதா" என்ற வசனத்தால் க்லோம புப்புஸங்களை யக்ருத்திற்கு மேல்பாகத்தில் இருப்பதாக சொல்வது அஸங்கதம் உண்டுகஸ்தமான மலத்திற்கு ஸமஸ்த கோஷ்டாச்ரயத்வம் இருப்பதைக் காட்டுவதற்காக உண்டுக நிரூபிதமாகவே சொல்லப்பட்டுள்ள 'ஊர்த்வ' பதமும் 'அதஸ்தாத்' பதமும் யக்ருத்திற்கு கீழேயுள்ள உறுப்புகளைத்தான் குறிக்கின்றனவென்பது பண்டிதர்களுக்குத் தெரியும் மேலும் 'ஊர்த்வம் யக்ருதாதி வ்யவஸ்திதம்' என்பதைக் கொண்டு யக்ருத்திற்கு மேலே என்றும் 'அதஸ்தாத் குதபர்யந்தம்' என்பதைக்கொண்டு உண்டுகத்திற்குக் கீழே என்றும் அர்த்தம்கொண்டால் யக்ருத்திற்கும் உண்டுகத்திற்கும் நடுவிலுள்ள கோஷ்ட ப்ரதேசம் புரீஷாதாரம் அல்லவென்று சொல்ல நேரிடும். இங்கே" பஞ்சமீ புரீஷதரா ஸாஹ்யபக்வாசயாச்ரயா தத்ரோண்டுகஸ்தம்மலம் விபஜதே" என்ற வாக்பட வசனம் ஸ்மரிக்கப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது. மேற்சொன்ன நியாயங்கள் க்லோம புப்புஸங்களை ஆமாசயங்களாக்குவதற்கு முற்றிலும் விருத்தங்கள் என்பது வெளிப்படை,

தந்வந்தரிபகவான்.

(மதுக்கூர் Dr. K. ஷாரோடி)

தன்வந்தரி பகவானின் அவதாரக்கொண்டாட்டத்தின்போது குறிப்பிட்டிருக்கும் அன்னாரின் வரலாறுகளையும் பெருமைகளையும் பொதுவாகப் பாரதமக்களும் விசேஷமாக வைத்திய உலகமும் மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயங்கமாட்டார்கள் என்பது திண்ணம். அன்னாரின் வரலாறுகளைப் போதித்துள்ள நம் சாஸ்திர புராணங்களில் தூரதிருஷ்டி யோடும்மட்டில் விஷயங்களைக் குறிப்பிடவில்லையென்பது ஆராய்ச்சியின்பேரில் தெரியவரும் இந்நாட்படிப்பாளிகள்

அவ்வார்த்தைகளைப் பண்டைகாலக் குப்பைகள் என்று புறக்கணிக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு விஷயத்தின் நுட்பங்களைக் கவனிக்க வல்லமை இவ்வறிவாளிகளுக்கில்லை யென்றே நிர்ணயிக்க வேண்டும். பிரகிருத விஷயத்தின் நுட்பங்களை இதனடியில் தெரிந்தமட்டில் விவரிப்பது வீண்பேச்சாகாதென்று எண்ணுகிறேன். தன்வந்தரியின் வரலாறுகளில் தேவாஸுரர்கள் ஒன்று சேர்ந்து பால்கடலைக்கடைய எண்ணி' மந்தரம் பர்வதத்தை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் கொண்டு கடைந்து வருகையில் தாழியைக்கீழே விடாது காத்துவர மஹாவிஷ்ணு கூர்மாவதாரமாய் தாழியை முதுகில் தாங்கிக் காரியம் நடைபெற்று வருகையில் அக்கடலினின்றும் பதினான்கு இரத்தினங்கள் (விசேஷ வஸ்துக்கள்) வெளிப்பட்டன. அவைகள் லக்ஷ்மி கௌஸ்துப பாரிஜாதக ஸுரா தன்வந்தரி ....என்பனவாம். இவ் வஸ்துக்களில் தன்வந்தரியும் உட்பட்டவராவர். இவர் மஹா விஷ்ணுவின் அம்சத்தினரும் தம் கைகளில் சங்கு, சக்ரம், அமிருதம் அட்டை ஆகியவைகளை ஏந்தி யெழுந்தவருமாவார். பின்னர் அவ்விஷ்ணு அம்சமே மோஹினி ரூபத்தையடைந்து தேவர்களுக்கு அமிருதத்தை அளித்தாரென்றும் கூறப்பட்டுள்ளது. இத்தன்வந்தரி தேவேந்திரனின்றும் வைத்யோபதேசத்தைப்பெற்று உலகப்ரசாரம் செய்தாரென்றும் கூறியிருப்பதல்லவா. இவ்விஷயத்தை ஒட்டிய ஆத்யாத்ம திருஷ்டியில் ஆராய்ச்சி செய்யின் "புருஷோவைஸமுத்ர" என்றபடி புருடன்—புருடஹிருதயம் ஸமுத்ரமாகும். அஸ்திமாம்ஸாதிகள் ததி (தயிர்) கப ரக்தாதிகள்' கிருதம்' க்ஷீரம்,—மது—சர்க்கரைகள் மதுபாலாகவும் கூறப்படலாம். மூலாதாரம் அல்லது பிராணன் கூர்மமாகவும், முதுகெலும்பு (பர்வங்கள் இருப்பதால்) மந்தரமாகவும்; குண்டலினி அல்லது பிராணாயாமம் வாஸுகியாகவும் இந்திரியஸ்தான சக்திகள் தேவர்களாகவும் இந்திரியவிருத்திகள் அசுரர்களாகவும் பகுத்தறிவு ஸமுத்திர மதனமாகவும் நிர்த்தாரணம் செய்யப்படலாகும். இவ்விடத்தின் இச்சமுத்திர ரத்தினங்களான பதினான்கு வஸ்துக்கள் யாவையென்று கூறப்பட்டே தீரவேண்டுமல்லவா. எவ்வித வரலாற்று வேற்றுமைகள் கூறப்படினும் எதால தன்வந்தரி ஆயுர்வேத தேசிகரென்று உறுதிப்படுத்தப்பட்

டிருப்பதுபோல் ஆத்யாத்மிக திருஷ்டியில் வேற்றுமைகளையடைந்த மனமே இப்பதினான்கு இரத்தினங்கள் அறிவுபெற்ற மனம் லக்ஷ்மீ ஈச்வர சங்கல்பத்தைக்கொண்ட மனம் கௌஸ்துபம், கேந்திர நாடிகளுடன் ஸம்பந்தப்பட்டு அவ்வப்போது ஏற்படும் வேற்றுமை அறிவுகளுடன் கூடிய மனம் பாரிஜாதம், சஞ்சல மனதின் அஞ்ஞானத்தன்மை மத்யம், சத்ருஷ்டியுடன் கூடிய மனம் சந்திரன் ஜீவகாருண்யப் பெருக்குள்ள மனம் தன்வந்தரி, இந்திரியங்களை வசீகரிக்க வல்லமனம் காமதேனு, இந்திரியத்தோற்றங்களின் வாஹனமாகவேற்படும் மனம் ஐராவதம், (மனம், புத்தி, சித்த, அகங்காரங்கள் இதன் தந்தங்கள்) இரு கண்கள், இரு காதுகள், இரு நாஸிகள் ஓர் வாய் ஆகிய ஏழு முகங்களோடு சம்பந்தப்பட்டிருக்கும் மனம் உச்சைசிரவஸ் என்னும் குதிரை, இடை, பிங்களை, ஸுஷும்னை, [illegible], சித்திரிணீ, முதலியவற்றின் சக்திகள் அப்ஸரஸ்திரீகள் (பரமார்த்த திருஷ்டியில் யோகிகளின் மனோ நிலைமைகளைச் சிதறடிக்கும் வேசிகள் இதுகளே) ஏகாக்ர நிலைமையைப்பெற்றுள்ள மனம் விஷ்ணுகாபாலாஸ்தி சங்கம், சிதானந்தரூபம் பெற்றமனம் அமிருதமுமாகும். இத்தன்வந்தரி கையில் ஏந்தியுள்ள தாமரை சக்ரமும், சிதானந்தம் பெறவுள்ள அமிருதமும், காயாவித்தன்மை பெறவுள்ளது சங்கமும் ஜனி மரணங்களை விடாது தொட்டுக் கொண்டிருக்குமெனக் காண்பிப்பது ஜலூகையுமாகும். அதிருச்ய சக்தியில் இந்திரிய திருப்தியைச் செய்தாவருவது மோஹினியினால் தேவர்களுக்கு அமிருதமளிப்பதாகும். மோக்ஷாதி விசேஷத்துகன்மைகளை அடையவேண்டிய வழிகளில் செல்ல ஆன்மா மனதை தாண்டுவது தேவேந்திரனின்றும் தன்வந்தரிக்குள் உபதேசமாகும், போதனா ரூபமான சஸ்திரத்தினால் ஸம்ஸார ரோகத்தைச் சேதனஞ்செய்யவுள்ளது இவரின் சஸ்திர சிகிச்சையுமாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. தைவிக, பௌதிக, ஆத்மிக தாபங்களை விலக்கவல்லமைபெற்ற இவர் (தன்வந்தரி) திரிவிக்ரமங்களில் சம்பந்தப்பட்டமையால் விக்ரமஸபையிலொருவராவார் என மற்றொரு பொருளாகும். மோஹம், அஞ்ஞானம் என்றும் தீர்க்கதமஸினின்று பின்னர் உண்டான ஞானம் சூரியாம்சம் பெற்ற இவராகும். வீரபத்திரர் என்றும் பிரம்மக்ஞானத்தைக் கைக்கொண்ட சிவோதாச

தன்வந்தரி இவ்வறிவுபெற்ற மனமே. நந்தி என்றும் புருட விசேடரின் ராஸியென்றும் சொர்கத்திநின்றும் ஆத்மக்ஞானத்துடன் தோன்றியவரிவராவார் என்றும் மற்றும் பற்பலவிதமாக தன்வந்தரியின் உபாக்யானங்களை ஆத்யாதிமிக ரூபத்தில் கூறப்பட்டுள்ளவைகளை அறிவாளிகள் மெம்மேலும் ஆராய்ந்து பார்த்து உண்மைகளை விளக்கிச் சாஸ்திரப்பெருமைகளை வெளிப்படுத்த வேண்டுகிறேன்.

ஜ்வரவாக்ய:—நான் எல்லோரைப்போல் உலகத்தில் பிறந்தவனே ஆனால் நான் பிறந்தநாள் நக்ஷத்திரங்கள் தெரியவராது. சிலர் என்னை தக்ஷயாக ஸமயத்தில் பிறந்தவனாய் கருதுகிறார்கள். இக்கருத்து நிஜமென்று கூறவழியில்லை, ஏன் என்றால்! எல்லாப்பிராணிகளுடைய பிறப்பிலும் இறப்பிலும் எனது முழுச்சம்பந்தம் ஏற்பட்டே இருக்கின்றது. அப்படியிருக்கையில் மேல் குறிப்புக்கு முன் தோன்றியுள்ள பிராணிகளிலும் என் சம்பந்த மேற்பட்டிருப்பதால் பிராணிகளின் பிறப்பு ஏற்படும் முன் பிறந்திருக்கவேண்டுமல்லவா? இவ்விஷயத்தை மற்றவர்களைப்போலவே (பால்ய வரலாறுகளை) நானும் தெரிந்துகொண்டிருக்க முடியாதல்லவா. ஆதலால் அவ்விஷயத்தை இங்கு தெரியப்படுத்த முடியாதகாரியம். பிராணிகளின் ஜீவித மத்தியிலும் என் சில அம்சங்களுடன் ஒவ்வொருவரையும் நான் அடைவதுண்டு. பிராணி வித்தியாசத்தில் பெயர் வித்தியாசமும் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. என் முழு ரூபத்தைக் குறிப்பிடமுடியாமலிருப்பினும் பல குணங்களின் மூலம் என்னைக்கண்டறிகிறார்களாக வெண்ணுகிறார். என் இனத்தார்களில் நானே மூதன்மைபெற்றவன். நான் செல்லவிருக்குமிடத்து எதிர்கொண்டழைக்கப்பலர் காத்திருப்பார்கள். பின்தொடர்ந்து வருவோர்களனேகம். நான் ஒருமைபெற்றிருப்பினும் என் மூர்த்திகளுடனும் அனேக மூர்த்திகளுடனும் கூறியதாய்க் கூறப்படுகிறேன். புது முறையில் என்னைக்கண்டுபிடிக்கக் கண்டுபிடித்துள்ள கண்ணாடிகள் மூலம் என்னைப் பூச்சியாகவும், புழுவாகவும் ஈயாகவும் கொசுவாகவும் கண்டறிந்துள்ளார்களாம், நான் அடையும் ஸ்தானங்கள் வயிறு, குடல், நெஞ்சு, மூளை, நரம்புகளாகுமென்கிறார்கள்

இலர் தேகம் முழுதும் மனதும் என்னால் பீடிக்கப்படுவதாய் கூறுபவர் மற்றும்பலர். உண்மையில் என்னையறிந்தவர்களில்லையென்றே சொல்லுவேன். நான் செல்லுமிடத்துப்பல துன்பங்களை மின்னும் பின்னும் மத்தியிலு மேற்படுத்துவேனாகிலும் என்னால் கொடுத்துவிடும் நன்மைகளைக் கவனிக்காத பொல்லாதவன் கொடும்பாவி உயிரைப்பறிப்போன், ஒஜோ தாதுக்களைத்தின்போன் என்றும் மற்றும்பல பழிகளைச்சுமத்துகிறார்கள். நான் அடையும் தேகத்தில் இரத்த ஓட்டத்தைப் பெருக்கச்செய்கிறேன். இதிலுண்டாகும் விஷத்தன்மையை ஸ்வேத மூத்திர வழியில் வெளிப்படுத்துவேன். பட்டினியின்மூலம் அஜீர்ணத்தன்மையை விலக்கிவிடுவேன். அதிக்குளிர்ச்சி, அதிக உஷ்ணம் ஆகியவைகளைத் தளர்த்திவிடுவேன், பீடிக்கப்பட்டவர்களைக் கண்டபடி அலைந்து திரியவிடாமல் படுக்கையில் போடுவேன், மற்றும் சில சௌகரியங்களையும் செய்வேன். மேலும் பிரதிபிராணியிலும் என்னேரமும் என் சாதாரணத்தன்மையான உஷ்ணத்தைக் கொடுத்தும் வருகிறேன். இல்லையேல் ஆபத்திற்கோ மரணத்திற்கோ காரணப்படும். நவீன முறைப்படி தாபமானக்கருவிகளின் மூலம் என்நிரந்தரச்சூடு 108 முதல் 109 வரையிலுமிருப்பதாய் நிர்தாரணம் செய்யப்பட்டுள்ளது. நன்னிமித்தம் சாதாரணமாக நாடீகதி 80 வரையில் ப்ரதி நிமிஷம் ஏற்படுகின்றது. பால்யாவஸ்தையில் இக்கதி கூடுதலாகவிருக்கும். அதனால் உஷ்ணமும் கொஞ்சம் அதிகப்படியேயிருக்கும்.

வைத்தியச்செய்தி.

சுதேசவைத்திய சபை மதுரை. மேற்படி சபையின் ஆதரவில் நாளது 1943வரு பிப்ரவரிமீ 20உ சனிக்கிழமை மாலை 5-மணிக்கு மதுரை காக்காத்தோப்புத்தெரு ஸூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் திண்டுக்கல் அட்வகேட் ஸ்ரீமான் V. R. விஸ்வநாதய்யர் அவர்கள் தலைமையில் சுதேச வைத்தியர்களின் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் Dr. V. சாமிநாதய்யர் அவர்கள் **க்ஷயரோகம்** என்ற விஷயத்தைப்பற்றி உபன்யசித்தார்கள்.

டாக்டர் T. S. சுப்ரமண்யம், காரியதரிசி.

ஹிருதயம்.

(பத்திராதியர்)

ஈரோடு டாக்டர், V. அச்சுதன் நாயர் அவர்களுடைய வியாசத்தின் இரண்டாவது பகுதியை இதில் பிரசுரித்துள்ளோம். ஆங்கிலக்கொள்கைகளில் நம்மவர்களுக்கு இருக்கும்வ்யாமோஹத்தைப் பற்றி நமது கண்டனக்காரர் பேசும்பொழுது தன்னை மிகவும்மறந்து விடுகிறார். "ஓஜஸ்" என்பதை oxygen எனக்கூறும் நமது கண்டனக்காரரைவிட மிகுந்த வியாமோஹமுள்ளவர் வேறு காணக் கிடைக்காதெனலாம். உரஸ் என்பதற்குப் பல பொருள்களை நாம் அங்கீகரிக்கவேண்டும். (1) ஹாரேணோரஸி ராஜதா (2) சுந்தர காண்டம் முதல் ஸர்கம்—"உரஸா பாதபான் ஹரன் (3) சுந்தர காண்டம் முதல் சர்க்கம்—"உரஸா சைலவர்ஷ்மணாம்" (4) சுந்தர காண்டம் முதல் சர்கம்—" உரஸா பாதயாமாஸ ஜீமூதமிவமாருத:" இதுபோன்ற இடங்களில் கண்டனக்காரருடைய அர்த்தமும் நமது அர்த்தமும் பொருந்துவதில்லை. ஆகவே மற்ற அர்த்தங்களை மற்றபடி அங்கீகரிப்பதுபோல "உரஸ்தம்,' "உரஸ்த: குருதே சுவாஸம்" என்ற இடங்களில் சுவாஸப்பைகள் எனப் பொருள்கொள்வது பொருத்தம் என்பது நமது மதம். க்ஷயரோகியினும், சுவாஸ ரோகியினும் சுவாஸப்பைகளே ௸ நோய்களுக்கு ஆச்ரயங்கள். இரைப்பை (stomach) யக்ருத், ப்லீஹா' என்ற இந்த மூன்று உறுப்புகளையும் ஆமாசயமென்றும் அவற்றுள் இரைப்பை மாத்திரம் புப்புஸம் எனவும் நமது கண்டனக்காரர் சொல்லுவது அஸங்கதம். ௸ மூன்று உறுப்புகளும் ஆமாசயமென்றால் அடியில்கண்ட வசனங்கள் விரோதிக்கின்றன. (1) ஹிருதயம் சாரீரம் மூன்றாவது அத்யாயம் "புக்தம் ஆமாசயே ருத்வா" இங்கு ஆமாசயம் என்பது இரைப்பையே. நமது கண்டனக்காரர் மதப்படி பார்த்தால் "புக்தம் புப்புஸே ருத்வா" என்று இருக்கவேண்டும். (2) ஹிருதயம் ஸூத்ரஸ்தானம் எட்டாவது அத்யாயம்— "ஆமாசயே அலஸீபூத:" ஆகாரம் மேலும் கீழும் போகாமல் ஆமாசயத்தில் நின்றுவிடுகிறது என்ற இந்த வசனத்தில் ஆமாசயபதம் இரைப்பையையே குறிக்கிறது, நமது கண்டனக்காரர் மதப்படி இங்கு "புப்புஸே அலஸீபூத:" என்று சொல்லவேண்டியதாகின்றது, (3) சுச்ருதம்— "ஸசதுர்விதஸ்ய ஆஹாரஸ்ய ஆதார:" என்று ஆமாசயத்தை ஆகா

நம் தங்குமிடமாகச் சொல்லியிருப்பதால் ஆமாசயம் இரைப்பையா கும். ஆயுர்வேத நூல்களில் ஆமாசய சப்தம் இரைப்பையைத்தவிர வேறு உறுப்பில் பிரயோகம் பெற்றதாக ஒரு உதாஹரணம்கூட காட்டமுடியாது. கண்டனக்காரர் மதப்படி புப்புஸம் என்ற பதம் இரைப்பையை குறிப்பதாக ஒரு உதாஹரணமும் காட்டமுடியாது. நமது கண்டனக்காரருடைய இவ்வளவு நீண்ட வியாசத்தில் புப்புஸபதம் இரைப்பையைக் குறிப்பதாக ஒரு பிரமாணம் கூட காட்டப்படவில்லை. "நாபிஸ்தநாந்தரம்" என்ற வசனம் ஸ்தூலமாக ஆமாசயம் இருக்கும் இடத்தைக்காட்ட வந்ததாகும். ஸாமான்ய விசேஷநியாயத்தை அறிந்த பண்டிதர் "சாகபசு" நியாயத்தைக் கொண்டும் இங்கு ஸமர்த்தனம் செய்யலாம். இந்த ஒரு வசனத்திற் காக மற்ற எல்லா பிரமாணங்களையும் புறக்கணித்தல் அபக்யாயமா கும். நாபிஸ்தநாந்தரம் என்பதுபோல் இதை திருடப்படுத்த வேறு சமான வசனம் ஆயுர்வேதத்தில் எங்கும் காட்டமுடியாது. ஆகவே இங்கு இரண்டு கேள்விகள் உதிக்கின்றன. (1) புப்புஸம் என்ற பதம் இரைப்பையைக் குறிக்கின்றதென்று நமது நூல்களில் எங்கா வது ஓர் உதாஹரணம் காட்டமுடியுமா? (2) ஆமாசயம் என்றபதத் திற்கு "இரைப்பை" என்ற அர்த்தத்தை விட்டு வேறு அர்த்தம் பொருந்தும்படியாக நமது ஆயுர்வேத நூல்களில் ஒரு பிரயோகமா வது காட்டமுடியுமா? முன் சொன்ன ஏழு ஆசயங்களில் வரிசைக் கிரமமாக முதலில் ரக்தாசயம், அதன்கீழ் கபாசயம்ஆமாசயம்என்று நமது கண்டனக்காரர் தன்வாயால் ஒப்புக்கொள்கிறார். ஆனால்தனக்கு உபஜீவ்யமான வியாசத்தின் (டாக்டர் V. N. நாயர் அவர்களுடைய வியாஸம்) விரோதத்தை மறந்துவிட்டார், கண்ட நாடி தடங்கி நாபிவரை அமைந்துள்ளது. 'ஆமாசயம் என்று உபஜீவ்ய வியாஸம் கூறுகின்றது. அப்படியிருக்க அதற்கு விருத்தமாக நமது கண் டனக்காரர் நாபிவரையில் மூன்று ஆசயங்களை அங்கீகரிக்கின்றார். கபாசயத்திற்குக் கோஷ்டாங்கங்கள் இருக்கவேண்டுமென்பது சாஸ் திர விருத்தமென்கிறார். இது மிகவும் அஸம்பத்தம். "கோஷ் டாங்கானி ஸ்திதான்யேஷு" என்ற வசனத்தில் "ஏஷு" என்பது ஏழு ஆசயங்களையும் சொல்லி அவைகளில் கோஷ்டாங்கங்களைச் சொல்லும்போது நடுவில் கபாசயம் மாத்திரம் தள்ளப்படுவானேன்?

இங்குதான் முக்கியமாக கவனிக்கவேண்டும். கபாசயத்தையும் அதன் கோஷ்டாங்கங்களையும் ஒப்புக்கொண்டால் நமது மதம் சித்திக்கின்றது. கபாசயத்தையும் அதன் கோஷ்டாங்கங்களையும் தள்ளிவிட்டால் நமது கண்டனக்காரர் மதம் நிலைபெறுகின்றது. நமது கண்டனக்காரர் கபாசயத்திற்கு கோஷ்டாங்கங்கள்சொல்லுவது சாஸ்திர விருத்தமென்கிறார். இனி இதைப்பற்றி சாஸ்திரங்களை ஆராய்வோம். அஷ்டாங்க ஹிருதயம் சாரீரம் மூன்றாவது அத்யாயத்தில் 10, 11, 12, சுலோகங்களில் ஏழு ஆசயங்களும் அவைகளின் கோஷ்டாங்கங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வசனங்களில் "ஸப்த" என்பது ஏழு ஆசயங்களைத்தான் குறிக்கும். ஒன்றைத் (கபாசயத்தை) தள்ளி ஆறு ஆசயங்கள் என்று அர்த்தம் சொல்லுவது சரியல்ல. ஷை வசன வியாக்யானத்தில் (அருணதத்தத்தில்) "ஸப்த = ரக்தாத்யாதாரேஷு" என்று ஏழு ஆசயங்களும் எனப் பொருள் காணப்படுகின்றது. மேலும் அஷ்டாங்க ஸங்கிரஹம் சாரீரஸ்தானம் ஐந்தாவது அத்யாயத்தில் "ஸப்தாசயா: க்ரமாத் அஸிருக், கப, ஆம, பித்த, பக்வ, வாயு, மூத்ராதாரா: தேஷு ஸப்தஸு ப்ரதிபத்தானி கோஷ்டாங்கானி" என்று ஸ்பஷ்டமாகவே ஏழுஆசயங்களுக்கும் கோஷ்டாங்கங்கள் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது நமது கண்டனக்காரர் என்னசெய்யப் போகிறார் என்பது தெரியவில்லை. கபாசயத்திற்குக் கோஷ்டாங்கங்கள் உண்டென்று ஷை வசனம் கூறுவதால் அந்த கோஷ்டாங்கங்களை நமது கண்டனக்காரர் சொல்லித்தீரவேண்டும். அதுமாத்திரமல்ல. இவருடைய மதத்தில் கபாசயமே சித்திப்பதில்லை. ஏனெனில் கவாஸப்பைகளும் ஹார்டும் சேர்ந்து இம்மூன்றும் இவர் மதத்தில் ரக்தாசயமாக ஆகிவிடுவதால் இந்த மூன்று நீங்கலாக எதைக் கபாசயமாகக்கொள்ளுவது? ஆகவே இவர்மதத்தில்கபாசயமும் இல்லாமல் அதன் கோஷ்டாங்கங்களும் இல்லாமல் போகின்றது. இந்தப் பிரதான தோஷத்தைப்பரிஹரிக்காமல் கிளைப்பிரச்னைகளில் கவனம் செலுத்துவது உசிதமல்ல. இந்த முக்கிய தோஷத்திற்குப்பரிஹாரமளிக்கும்படி நமது கண்டனக்காரரை வற்புறுத்துகிறோம். "தஸ்ய வாமபார்சுவே ப்லீஹா புப்புஸச்ச, தக்ஷிணதோ யக்ருத் க்லோம ச" என்ற வாக்யத்திற்கு நமது கண்டனக்காரர் எழுதியுள்ள அர்த்தம்

அஸங்கதம். "ஹ்ருதயத்தின் இடது பக்கத்தில் முதலில் ப்லீஹா வும் பிறகு புப்புஸமும்" என்று இவர் செய்யும் அர்த்தத்தில் "முத லில்" பிறகு" என்ற பாகத்திற்கு மூலத்தில் பதங்கள் இல்லை. தஸ்ய=ஹ்ருதயத்தினுடைய, வாமபார்ச்வே=இடது பக்கத்தில், ப்லீஹா=ப்லீஹா என்ற உறுப்பும், புப்புசஸ்ச=புப்புசமும் (இருக் கின்றன) என்பது பொருள், இங்கு முதலில், பிறகு, என்ற அர்த் தங்களை நமது கண்டனக்காரர் சேர்த்துக்கொண்டார். இப்படி சேர்த்தால்தான் இவர் மதம் சித்திக்கின்றது. தன் மதம் சித்திப்ப தற்காக இரண்டு வார்த்தைகளை அத்யாஹாரம் செய்துவிட்டார். தயவுசெய்து நமது கண்டனக்கார "முதலில், பிறகு," என்ற அர்த் தங்கள் எந்த மூலவசனத்தால் கிடைக்கிறதென்பதைக் காட்ட வேண்டுகிறோம். இவர் உதாஹரித்துள்ள வசனத்தில் இவ்வர்த் தங்கள் கிடைக்காவிட்டாலும் இந்த அர்த்தம் கிடைக்கும்படி வேறு வசனங்கள் இருந்தாலும் காட்டலாம். தோஷங்களுக்கு ஏகாச்ர யத்வ நியமமில்லை என்பதற்குப் பல நிரூபணம் செய்துவிட்டு அது போலவே க்லோமாவையும் ஒப்புக்கொள்ளலாமென்கிறார். "வச நாத் ப்ரவ்ருத்தி, வசநாத் நிவ்ருத்தி:" என்ற நியாயப்படி வசன பலத்தால் மற்றவைகளை ஒப்புக்கொள்ளுவதுபோல, க்லோமாவில் ஒப்புக்கொள்ளும்படி இவர் சாஸ்திர வசனங்களை ஏன் காட்ட வில்லை? தவிர க்லோமாவை இவர் பித்தஸ்தானமாகவே ஒப்புக் கொள்ளவேண்டியதாகின்றது. இவருடைய உபஜீவ்ய வியாசத்தில் "க்லோம, பிபாஸாஸ்தானம்" என்ற வசனத்திற்குப் பொருள் கூறும்பொழுது (வைத்யசந்திரிகை 1942ளு பிப்ரவரிமாத சஞ்சி கை பக்கம் 12, 13, 14) க்லோமாவை "கிரஹணி" என்றும், Duodenum" என்றும், "பச்யமாஞசயம் என்ற பெயரும் க்லோமஎன்ற உறுப்புக்கும் பொருந்தும். ஜாடராக்னி இருப்பிடம், பித்தமார்கம் பக்வாசயத்வாரம் என்ற பெயர்கள் இந்த உறுப்புக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன" என்று சொல்லியிருப்பதை இவர் மறந்து இப் பொழுது இந்த வியாசத்தில் "க்லோம பித்தஸ்தானமல்ல" என் கிறார். முதலில் க்லோம பித்தஸ்தானமென்று சொல்லி சில காலத் திற்குள் முன் சொன்னதை மறந்து பித்தஸ்தானமல்லவென்று கூறுவது உன்மத்தப்ரலாபிதம் போலாகும். க்லோமாவை பித்த

ஸ்தானமென ஆயுர்வேதத்தில் எங்கும் பிரமாணம் காட்ட முடியாது. க்லோமா முக்கியகபஸ்தானமல்ல வென்பதற்காக இவர் "கண்ட சிர: ஸந்தி பர்வாண்யாமாசயோ ரஸ:" என்று பாடாந்தரத்தில் க்லோமாவை விட்டு "ஸந்தி" என்ற பதம் அமைந்திருப்பதையும், இந்த பாடாந்தரத்திற்கு உபபலமாக "ஆமாசயேத ஹ்ருதயே கண்டே சிரஸி ஸந்திஷு" என்ற வசனத்தையும் காட்டியுள்ளார். இது மிகவும் அஸங்கதம், "ஸந்தி பர்வாணி" என்ற பாடாந்தரம் அபபாடமாகும். தவிர புனருக்தியும் வரும். ஸந்தி என்பதற்கு எது அர்த்தமோ அதுதான் பர்வ என்பதற்கும் பொருள். ச[illegible] ஞானமில்லாதவர்கள் "கோர்ட் கச்சேரி, ஸ்கூல் பள்ளிக்கூடம், கோவாசல்," என்று சொன்னாலும் நமது கண்டனக்காரர் போன்ற பண்டிதர்கள் இதை அங்கீகரிக்க முடியாது. பர்வ என்பதற்கு ஸந்தி என்பதற்கும் உள்ள அர்த்த பேதத்தை இவர் ஏன் எழுதவில்லை? அஷ்டாங்க ஸங்கிரஹம் ஸூத்ரஸ்தானம் இருபதாவது அத்யாயத்தில் "பர்வஸ்த: அஸ்தி ஸந்தினாம் ச்லேஷ்மணாத் ச்லேஷ:" என்ற மூலவசனத்தைப் படித்திருப்பதால் நமது கண்டனக்காரர் இந்த பாடாந்தரத்தை இனி மறந்துவிடுவார் என்று நினைக்கிறோம். "ச்லேஷ்மா து பஞ்சதா" கபம் என்பது சரீரத்தில் செய்யும் தொழிலையொட்டி ஐந்து ஸ்தானங்களில் நிலைபெற்று ஐந்து பெயர்களை அடைகின்றன. அவற்றுள் அவலம்பகம் என்ற வகையானது—"உரஸ்த: ஸத்ரிகஸ்ய ஸ்வவீர்யத:] ஹ்ருதயஸ்ய அன்ன வீர்யாச்ச தத்ஸ்த ஏவ அம்புகர்மணா] கபதாம்நாம் ச சேஷாணாம் யத் கரோதி அவலம்பனம்]" இதன் பொருள்—"அவலம்பகம் உரஸ்ஸில் நிலையுள்ளது. ஸ:= அது, த்ரிகஸ்ய = பிடரிக்கு ஸ்வவீர்யத:=தன் சக்தியால், அவலம்பனம் கரோதி= தன் தொழிலை அதாவது பிடரியின் தொழிலைச்செய்ய ஸாமர்த்தியத்தை யளிக்கின்றது. ஹ்ருதஸ்ய = ஹ்ருதயத்திற்கு, அன்னவீர்யாச்ச = தன் சக்தியாலும் அன்னரஸ சக்தியாலும், அவலம்பனம் கரோதி:= அது தொழிலைச்செய்ய அதாவது ஹ்ருதயத்தின் தொழிலைச்செய் சாமர்த்யத்தைக் கொடுக்கின்றது. தத்ஸ்த ஏவ = உரஸ்ஸில் இருந்துகொண்டே, சேஷாணாம் = மற்ற, கபதாம்நாம் = கண்டம் முதலிய கபஸ்தானங்களுக்கும், அம்புகர்மணா = க்லேதம், ஸம்ச்லேஷம், தர்ப்பணம்

முதல்பக்கம் பார்க்கவும்.

(1)	(2)	(1)	(2)